# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Multidisilinary Journal )

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :24 October 2024*　　கோட்டை:6 வாயில்:24 அக்டோபர் 2024

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**

Publisher
**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**
Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**
Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**
Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And  Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

**பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்**

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

---

**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்


**இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்**
இரா.பிரதீப் ராஜ்

**திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**
முனைவர் இரா. யசோதா

**ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை**
மு.கயல்விழி

**காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்**
முனைவர் க. ஜவகர்

**இமயத்தின் செடல் கதாப்பாத்திரம்**
ஓர் ஆய்வு - ரா.சந்தியா

**விளக்கு பண்பாடு "சாவா மூவா பேராடு"**
கோ. அசோகன்

**காவல்கோட்டம் நாவலின் வழி தாதனூர் மக்களின் வாழ்வியல்**
க.பிரியா

**சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்**
மு.முத்துமாரி

**நாட்டுப்புற மருத்துவம் சார் கலைச்சொற்கள்**
கு.வருதராஜ்

**திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்**
முனைவர் ஆ. கவிதாராணி

**கதை பேசும் ஆடல் கலையான கதகளி**
கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

**நெடுங்கல்: பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பெருங்கற்கால பண்பாடும்**
மு.சத்தியா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி
அ.சகாய ஜெசிகலா

பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

சோழர்கால கலைப்படைப்பில் திருவேள்விக்குடி கோயில்
ச.பாப்பாசெல்வம்

சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்
முனைவர். அ. அமுல்ராஜ்

Exploring the Dynamics of Tourism Planning
S.John Abraham

Exploration of French Colonial Era Paintings in the Puducherry Government Museum
Gayathry. D

Revolutionizing Data Security and Privacy in Fintech with Blockchain and Cryptocurrencies
P.M.Shiyana.

மக்கள் பாடகர்களின் சமூக நிலை
வ.விக்டர்

இசையும் சமூக விமர்சனமும்
வ.விக்டர்

Mridanga Cintamanih": Exploration of its Impact on Carnatic Music and Education
V. Vijay Arun

Study of Techniques used while adapting popular Western Instruments to perform Carnatic Music
V. Vijay Arun

மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்
ச.ஜெயப்பிரகாஷ்.

ஆன்மிகமும் உயிர்ப்பன்மயம் அறிவியலும்
முனைவர் இரா.பிரியதர்சினி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி



# இசை

# ஆன்மிகமும் உயிர்ப்பன்மயம் அறிவியலும்

## *Spirituality and Biodiversity Science*


*முனைவர் இரா.பிரியதர்சினி*
*இணைப்பேராசிரியர்*
*முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை*
*ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி(த)*
*மதுரை*

*முனைவர் மொ.கண்ணன்*
*இணைப்பேராசிரியர்*
*தாவரவியல் துறை*
*NMSSVN கல்லூரி(த)*
*மதுரை.*



***Abstract***

*Spirituality and Science may seem like disparate realms, but a closer examination reveals that ancient spiritual practices hold profound scientific truths. The symbols, creatures and objects associated with worship often conceal deeper meanings, reflecting the intricate web of life. Our ancestors intuitively understood the interconnectedness of all living beings, encoding this system in spiritual traditions. This article seeks to uncover the subtle scientific principles embedded in spiritual beliefs, revealing the harmony between spirituality and biodiversity. By exploring theses connections we may discover new avenues for preserving the natural world and fostering a more holistic understanding of our place within it.*



***Key words***

*Biodiversity, Spirituality, Geography, Astronomy, Plants, Animals, Birds. Reptiles, Arthropods*



**ஆய்வுச்சுருக்கம்**

*ஆன்மிகத்தை ஆராய்ந்து நோக்கினால் அறிவியல் உண்மைகள் அவற்றில் மறைந்துள்ளதைக் காணமுடிகிறது. இறைவழிபாட்டில் தலவிருட்சங்களிலும், இறைவனுக்கான வாகனங்களிலும், இறைவனின் கொடிகளில் உள்ள உயிரினங்களிலும், இறைவனின் வழிபாட்டில் பயன்படுத்தப்படும் பொருட்களிலும் உயிர்ப்பன்மயம் ஓம்பல் என்ற உயரிய எண்ணம் மறைந்திருப்பதைக் காணமுடிகிறது. இறைவனின் தசாவதாரம், வள்ளலாரின் ஜீவகாருண்யம், நோவாவின் பேழை, மானுக்குப் பிணை நின்றும், உடும்பை பேச வைத்தும் முகமதுநபிகள் வெளிப்படுத்திய கருணை என அனைத்து சமயங்களிலும் உயிர்ப்பன்மயம் உள்ளதை உணரமுடிகிறது. நமது முன்னோர்கள் உயிர்ப்பன்மய ஓம்பல் என்ற சிறந்த சிந்தனையை ஆன்மிகத்துடன் இணைத்து மக்களுக்கு அறிவித்துள்ளனர். அறிவியலும் ஆன்மிகமும் இணைந்தே பயணிக்கின்றன. ஆன்மிகத்தில் உள்ள அறிவியலையும் அறிவியலில் உள்ள ஆன்மிகத்தையும் அறிந்தால் அறிவியல் உலகிலும் அறவாழ்வு வாழலாம் என்பதை வெளிப்படுத்தும் நோக்கிலும் ஆன்மிகத்தில் உயிர்ப்பன்மய அறிவியல் மறைந்துள்ளதை ஆராயும் நோக்கிலும் இக்கட்டுரை அமைக்கப்படுகிறது.*



**திறவுச்சொற்கள்**

*உயிர்ப்பன்மயம், ஆன்மிகம், புவியியல், வானியல், தாவரங்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, சிற்றுயிர்கள்*

**முன்னுரை**

உயிர்ப்பன்மயம் என்பது உலகம் சமநிலையில் இயங்க உதவக்கூடியது ஆகும். இத்தகய இன்றியமையாத அறிவியலை மக்கள் மத்தியில் கொண்டு செல்லவும், மக்கள் உயிர்பன்மயத்தை ஓம்பவும் நமது முன்னோர்கள் ஆன்மிகத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது. கல்வி அறிவு பெறாத பாமரர்கள் முதல் கல்வியில் தேர்ந்த அறிஞர்கள் வரை ஆன்மிகம் ஊடுருவி உள்ளது. இதனால் உயிர்ப்பன்மய ஓம்பல் என்பது எளிதாக மக்களிடம் ஆனமிகம் வழியாக பரவி விடுகிறது. அறிவியலை அறியாத பாமரர்களும், சிறுவர்களும் எளிதில் உயிர்பன்மய அறிவியலைப் பின்பற்ற ஆன்மிகம் உதவுகிறது. ஆன்மிகம் என்பது மக்களின் நம்பிக்கையுடன் தொடர்புடையதாக உள்ளதால் உயிர்ப்பன்மய ஓம்பல் என்பது எளிதாக்கப்படுகிறது. ஆன்மிகத்தில் மறைந்துள்ள உயிர்ப்பன்மய அறிவியலை ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைக்கப்படுகிறது.

**உயிர்ப்பன்மயம் என்றால் என்ன?**

புவியின் எல்லாப் பகுதிகளிலும் பல்வேறு சூழல்களில் வாழும் பலவகையான உயிரினங்களைப் பற்றி விவரிக்கப் பயன்படுத்தும் ஒரு சொல்லாகும். இது புவியில் காணப்படும் அனைத்து பல்வேறுபட்ட சூழல் மண்டலங்களையும், அனைத்து உயிரினங்களையும் அவற்றின் வாழிடங்களையும் மரபணுக்களைப் பற்றியும்; குறிக்கின்றது.

**உயிர்ப்பன்மயத்தின் பயன்கள்**

மகரந்தச்சேர்க்கைக்கும், விதைப்பரவலுக்கும் உதவுகிறது. உணவுச்சங்கிலி முறையாக அமைய உதவுகின்றது. மக்களின் வாழ்வாதாரமாக உள்ளது. பொருளாதாரத்தின் முதுகெழும்பாக உள்ளது. மக்களின் அடிப்படைத்தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், நல்வாழ்வுக்கான மருத்துவம் என அனைத்தும் உயிர்ப்பன்மயத்தாலேயே கிடைக்கின்றன.

**இலக்கணங்களில் உயிர்ப்பன்மயம்**

தமிழில் முழுமையாகக் கிடைக்கும் முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் மரபியலில் பல்வேறு உயிரினங்களின் ஆண்பால், பெண்பால் பெயர்களையும், இளமைப் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பியர் உயிரினங்களை அவற்றின் அறிவின் அடிப்படையில் பட்டியலிட்டு உள்ளார். தொல்காப்பிய அகத்திணையியலிலும் பொருளிணக்கத்திலும் முதல்பொருள் மற்றும் கருப்பொருள் பற்றி கூறப்பட்டுள்ளது. முதல் பொருளில் நிலம் மற்றும் பொழுது கூறப்பட்டுள்ளது. புவியியல் அடிப்படையில் பிறக்கப்பட்ட ஐவகை நிலங்கள், தட்பவெப்பநிலை மாற்றத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட சிறுபொழுது, பெரும்பொழுது ஆகியவை புவியியல் மற்றும் வானியல் அறிவியலைக் குறிக்கின்றன. கருப்பொருள்கள் பற்றி கூறும் பொழுது அந்தந்த நிலத்திற்கேற்ற பறவை, தாவரம், விலங்கு, நீர், உணவு, மக்கள், தொழில், இறைவன் என அனைத்தும் கூறப்பட்டுள்ளன. இவ்வாறாகப் பழந்தமிழ் இலக்கணங்கள் உயிர்ப்பன்மயத்தைப் பதிவிட்டுள்ளதை அறியமுடிகிறது.

**இயற்கை வழிபாடு**

சிலப்பதிகாரத்தின் கடவுள் வாழ்த்து திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்; எனத் தொடங்கி ஞாயிறு, மாமழை என இயற்கை வாழ்த்தாக அமைகின்றது. சந்திரரே சூரியரே சாமி பகவானே என்ற நாட்டுப்புறப்பாடல் இயற்கை வழிபாட்டை விளக்குகிறது. நீரின்று அமையாது உலகு என வள்ளுவம் நீரின் இன்றியமையாமையை வான்சிறப்பு என்ற அதிகாரத்தில் வழி கொண்டாடுகிறது. நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதி சூடி

என்ற தேவார வரியில் சிவபெருமான் தனது சடாமுடியில் கங்கையையும், பிறைநிலவையும் தாங்கியுள்ளமை கூறப்பட்டுள்ளது. நவகிரக வழிபாடு என்பதில் கோள்கள் இடம்பெற்றிருப்பதாலும், சிவபெருமானின் பஞ்சபூத தலங்கள், வருணன், அக்னி, வாயுபகவான் என்ற வழிபாட்டு முறையாலும் இயற்கையை இறைவனுடன் இரண்டற கலந்து வழிபடும் வழக்கத்தை அறியமுடிகிறது. ஆதி காலத்து மனிதனுக்கு இயற்கையின் மீது இருந்த அச்சமே இயற்கையை வழிபட வழிவகுத்தது. இயற்கை வழிபாடு இயற்கையைப் பாதுகாக்க வழிவகுத்தது.

**தாவரங்களும் ஆன்மிகமும்**

சிவபெருமானுக்கு உரிய மரமாக வில்வமும், ஏற்ற மலராகக் கொன்றையும் கூறப்படுகின்றன. தேங்கொன் கொன்றை திளைக்குந் திருப்புத்தூர் (தேவா.1104,3:2) என்ற தேவாரப் பாடல்வரியில் கொன்றை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. வில்வம் என்பது சிவமூலிகைகளின் சிகரம் என அழைக்கப்படுகிறது. வில்வ இலை, காய், பழம் என அனைத்தும் மருத்துவ குணம் உடையவை. கொலஸ்ட்ரால், சர்க்கரை நோய், அல்சர், ஜீரணக்கோளாறு, தோல் நோய் என அனைத்தையும் குணப்படுத்தக் கூடியதாகும். ஏஜிலின், யுஜினால், இம்பிரடோரின் போன்ற அல்கலாய்டுகள் வில்வத்தின் மருத்துவ குணத்திற்குக் காரணமாக அமைகின்றன. வன்னி, புன்னை, குருந்தம், பலா, வாகை, வாழை, மகிழமரம், சண்பகம், கோங்கு, பனை ஆகிய மரங்களும் தலமரங்களாகப் பக்தி இலக்கியங்களில் சுட்டப்பட்டுள்ளன. பனை மரம் கற்பகத் தருவுடன் ஒப்பிடப்படுகிறது. பனை மரத்தின் ஓலை, நொங்கு, பதனி, கிழங்கு, பனைப்பொருட்களில் இருந்து தயாரிக்கப்படும் கருப்பட்டி, பனங்கற்கண்டு எனப் பல்வேறு வகைகளில் அதிகப் பொருளாதாரப் பலன்களைக் கொடுப்பதாகவும் மருத்துவ குணம் உடையதாகவும் பனை உள்ளது. செண்பக மலர் பொழிற் சிவபுரமே (தேவா.778,4;4) புன்னை நன்மாமலர் பொன்னுதிர்க்கும் புனவாயிலே (தேவா.1108,1:4) குலைவாழை கமுகம் பொன்பவளம் பழுக்குங் குடவாயில் (தேவா. 952,1:3) ஆகிய வரிகளில் தலமரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தும்பை, ஊமத்தம், ரோஜா போன்ற மலர்களும் சிவ வழிபாட்டிற்கு உகந்தவையாகக் கூறப்படுகின்றன. ரோஜா மலரிலிருந்து தயாரிக்கப்படும் வாசனைத்திரவயமும், ரோஜா இதழ்களும் பல்வேறு நுகர்பொருட்கள் தயாரிக்கப்பயன்படுகின்றன. அவ்வகையில் பொருளாதார மேம்பாட்டிற்கு ரோஜா உதவுகிறது. தும்பை ஒற்றைத்தலைவலி, தலைபாரம், நீர்க்கோர்வை, இருமல் ஆகியவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகிறது. ப்ளேவனாய்ட்டு, அல்கலாய்டு, பினோலிக் அமிலம் ஆகிய உயிர்ச்செயலைத் தூண்டும் வேதிப்பொருட்களைக் கொண்டுள்ளது. ஊமத்தம் வாத நோய்களைக் கட்டுப்படுத்தும். சுவாச நோயைக் குணமாக்கும். வி~ கடிக்கு மருந்தாகிறது. பயோசயமைன், அட்ரோபைன், ஸ்கோபோலமைன் ஆகிய வேதிப்பொருட்களைக் கொண்டுள்ளது.

விநாயகருக்கு உரியதாக எருக்கம் மலரும், அருகம் புல்லும் கூறப்படுகின்றன. அரசமரம், ஆலமரத்தின் அடியில் விநாயகர் சிலை வைத்து வழிபடும் வழக்கம் காணப்படுகின்றது. அரசமரம் போதி மரம் என்று புத்த மதத்தினரால் அழைக்கப்படுகிறது. ஆல் போல் தழைத்து அருகு போல் வேறுண்றி என்று வாழ்த்தும் மரபு உள்ளது. ஆலமரத்தின் வேர் ஆழமாக செல்வதாலும், விழுது விட்டு பரந்து நிற்பதாலும், பல உயிரினங்களுக்கு இருப்பிடமாக இருப்பதாலும் இவ்வாறு கூறப்படுகிறது. மனிதர்களும் ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளுடனும் தனக்கும் பிறருக்கும் பயனுள்ள வகையில் வாழவேண்டும் என்பதாக இவ்வாழ்த்து அறிவிக்கின்றது. அருகு விரைவாக பரந்து விரிந்து வளர்வது போல் மனிதனின் புகழும் பரந்து விரிந்து வளர வேண்டும் என்பதை இவ்வாழ்த்து கூறுகிறது. ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்ற பழமொழி பல்மருத்துவத்தின் முன்னோடியாக உள்ளது. ஆலமரம் டெர்பின், கொமாரின், ப்ளேவனாய்டு போன்ற வேதிப்பொருட்களைக் கொண்டஉள்ளது. 1950 ஆம் ஆண்டு ஆலமரம் நம் நாட்டின் தேசிய மரமாக அறிவிக்கப்பட்டது. திருப்புல்லாணி எனும் திருத்தலத்திலுள்ள

அரசமரத்தினைக் கண்ட அளவில் சகல நோய்களும் விலகும் என அம்மரத்தடியில் பொறிக்கப்ட்டுள்ள புல்லை அந்தாதிப் பாடல் குறிக்கிறது. (தலமரங்கள் ப.59) அருகம் புல் சாறு சர்க்கரை நோயைக் குறைக்கிறது. சைட்டோஸ்டீராயில், கரோட்டீன், ஸ்டிக்மாஸ்டிரால் போன்ற கரிம கூட்டுப்பொருட்களை அருகு கொண்டுள்ளது. எருக்கு பூக்கள் புண்களை ஆற்ற உதவுகிறது. வி~ கடிக்கு மருந்தாக உள்ளது. வீக்கம், கட்டிகளை குணப்படுத்த உதவுகிறது. வெட்டிவேர் விநாயகர் வைத்து வழிபாடு செய்வதால் நேர்மறை எண்ணங்கள் நம் இல்லத்தில் நிலைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. வெட்டி வேர் தாகம் தணிக்க, வயிற்றில் ஏற்படும் நோய்களைக் குறைக்க, வாந்தி பேதியைக் குணமாக்க உதவக்கூடியதாகும். வோலடைல் ஆயில், சாப்போனின் போன்ற மருத்துவ குணமுடைய வேதிப்பொருட்களைக் கொண்டுள்ளது.

வேப்பமரம் அம்மனுக்கு உரியதாகவும் அம்மனின் வடிவாகவும் பார்க்கப்படுகிறது. வேப்பிலைக்காரி என அம்மனை அழைக்கும் பழக்கமும் உள்ளது. அம்மை நோய்க்கு மருந்தாக இன்றைய அறிவியல் உலகிலும் வேப்பிலையும் மஞ்சளும் பயன்பாட்டில் உள்ளன. அம்மை நோயை அம்மன் அருளால் குணமாக்கலாம் என்ற நம்பிக்கையில் வேம்பு முக்கிய இடம் வகிக்கிறது. வேம்பில் உள்ள அஸடராக்டின் என்ற வேதிப்பொருளே அம்மை நோய்க்கு மருந்தாகிறது.

திருமால் வழிபாட்டில் துளசி முக்கிய இடம் வகிக்கிறது. துளசி ஜீரண சக்தியை அதிகரிக்கிறது. இருதயம் போன்ற உறுப்புகள் சீராக இயங்கவும், ஆஸ்துமா, இருமல் போன்ற நோய்கள் குணமாகவும் துளசி உதவுகிறது. மன அழுத்தத்தைக் குறைக்கவும் உதவுகிறது. லினலூல், கேம்பர், யுஜினால் போன்ற இன்றியமையாத வேதிப்பொருட்களைக் கொண்டுள்ளதால் மருத்துவ குணத்துடன் துளசி உள்ளது.

மன்மதன் கரும்பு வில், மலர் அம்பு, தென்றல் தேர், தேரை இழுத்துச்செல்லும் கிளி உடையவன் என்கிறது அழகர் கிள்ளை விடு தூது. கரும்பு பொருளாதாரத்தை ஈட்டித்தரும் தாவரமாக உள்ளது. கரும்பில் உள்ள சுக்ரோஸ் செரிமானத்திற்கு உதவக்கூடியதாக உள்ளது.

முருகனை கடப்ப மலர் மாலை தாங்கிய தோளா போற்றி என வாழ்த்துகிறோம். கடம்பமர் நெடுவேள் என பெரும்பாணாற்றுப்படையும் கடம்பின் சீர்மிரு நெடுவேள் என்று மதுரைக்காஞ்சியும் கூறுகின்றன. மதுரையை மட்டுமின்றி பழநி மலையையும் கடம்ப வனம் என அழைப்பதுண்டு. கடம்பமலரின் நறுமணம் பல்வேறு மருத்துவக் குணங்களை உடையது எனவும் இந்த மலர்களைத் தழுவி வீசும் காற்று சஞ்சீவி காற்று என்றும் சொல்லப்படுகிறது.

அரளி மலர் இறை வழிபாட்டில் அதிகம் இடம் பிடிக்கிறது. நான்கு வழிச் சாலைகளில் மரங்களுக்கு மாற்றாக அரளிச்செடிகள் நடப்படுகின்றன. இத்தாவரம் கார்பன்-டை-ஆக்ஸைடை அதிகம் உள்ளிளுக்கும் என்ற அறிவியல் காரணத்தின் அடிப்படையில் நான்கு வழிச் சாலைகளின் நடுவில் இது நடப்படுகிறது. செம்பருத்தி வாராஹி அம்மனுக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது. நீரழிவு நோய்க்கு, இரத்த அழுத்தும் குறைய, கூந்தல் வளர, நோய் எதிர்ப்பு சக்கியை அதிகரிக்க எனப் பல்வேறு வகையில் பலனைத் தருகிறது செம்பருத்தி. ஆந்தோசைனின், பாலிபினால் ஆகிய வேதிப்பொருட்களைக் கொண்டள்ளது. தாமரை இந்தியாவின் தேசிய மலராக 1950ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. திருமகளும், பிரம்மனும், கலைமகளும் தாமரை மீது அமர்ந்து இருப்பதாக ஆன்மிகம் கூறுகிறது. வெள்ளத்தனைய மலர்நீட்டம் என வள்ளுவம் உரைப்பதும் சேற்றில் முளைத்த செந்தாமரை என்ற கூற்றும் தாமரையின் சிறப்பைப் பற்றியவையே ஆகும். நமது சுற்றுச்சூழல் எத்தகையதாக இருந்தாலும் முயற்சி, பயிற்சியால் நாம் முன்னேற வேண்டும் என்ற வாழ்வியல் அறம் தாமரை வாயிலாக அறிவிக்கப்படுகிறது. தாமரை மருத்துவ குணம் கொண்டதாகவும் உள்ளது.

எலும்பிச்சைப்பழம் இறை வழிபாட்டில் முக்கிய இடம் வகிக்கிறது. அம்மனுக்கு, சோணை முத்தையா போன்ற சிறு தெய்வங்களுக்கு எலும்பிச்சைப் பழ மாலை அணிவிக்கும் வழக்கம் காணப்படுகிறது. கோவிலில் இருந்து பெறப்பட்ட எலும்பிச்சைப் பழம் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. எலும்பிச்சை சிட்ரஸ் ஆசிட் என்ற வேதிப்பொருளை உடையது. அஜீரணம், பல் பிரச்சனைகள், தொண்டை தொற்று நோய்கள், காய்ச்சல், உட்புற இரத்தப்போக்கு, உடல் பருமன், சுவாசக்கோளாறு, இரத்த அழுத்தம் ஆகியவற்றை குணமாக்குகிறது.

**ஆன்மிகமும் பறவைகளும்**

ஆண்டாள், மீனாட்சி கைகளில் கிளியும், திருமாலுக்கு கருடன் வாகனமும், பிம்மனுக்கு அன்னப்பறவை வாகனமும், முருகனுக்கு மயில் வாகனமும், சனீஸ்வரனுக்கு காகம் வாகனமும் இருப்பதாக நம்பப்படுகிறது. 'இருவடிவு கொண்டமையால் எங்கள் பெரிய திருவடிகள் (கருடன்) வீறுஎல்லாம் சேர்வாய்' என்ற அழகர் கிள்ளை விடு தூது வரியானது கருடன் பற்றி உரைக்கிறது. 1963 ஆம் ஆண்டு மயில் நமது தேசியப்பறவையாக அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மயிலின் தோற்றம் பல வண்ணங்கள் உடையதாக உள்ளதால் வேற்றுமையில் ஒற்றுமை என்ற இந்திய தனித்துவத்தை உணர முடிகிறது. கிளியிடம் இருந்து கற்றுக்கொள்ளுதல் திறனையும், கருடனிடம் இருந்து கூர்நோக்குத்திறனையும், அன்னப்பறவையிடம் இருந்து நன்மை தீமைகளைப் பிரித்தெடுக்கும் அறிவையும், காகத்திடமிருந்து கூடிவாழும் பண்பையும் மனித இனம் கற்றுக்கொள்ள முடிகிறது.

**ஆன்மிகமும் விலங்குகளும்**

சிவபெருமானுக்கு நந்தி வாகனமும், பைரவருக்கு நாய் வாகனமும், விநாயகருக்கு மூஞ்சுறு வாகனமும், ஐயப்பனுக்கு புலி வாகனமும், அம்மனுக்கு சிம்ம வாகனமும் ஆன்மிகத்தில் உள்ளன. 'தோடுடைய செவியன் விடையேறியோர்' என திருஞானசம்பந்தர் சிவபெருமானின் நந்தி வாகனம் பற்றி கூறியுள்ளார். காளை உழைப்பின் அடையாளம் ஆகும். உழவுக்கும், பயணத்தில் வண்டி இழுக்கவும் மனித வாழ்வில் பெரும்பங்கு ஆற்றுகிறது. காளைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. ஜல்லிகட்டு காளைகள் குடும்பத்தில் ஒருவராகவே வளர்க்கப்படுகின்றன. நாய் என்பது 'நன்றி' என்ற உயரிய பண்பிற்கு உதாரணமாகவும் காவல் என்ற திறனுக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது. 1972 ஆம் ஆண்டு புலி தேசிய விலங்காக அறிவிக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டிற்கு முன் காட்டின் அரசனாக அறிவிக்கப்பட்ட சிங்கம் தேசிய விலங்காக இருந்தது. அழிந்து வரும் புலி இனத்தைக் காக்க புலி தேசியவிலங்காக அறிவிக்கப்பட்டது. சிங்கமும், புலியும் கம்பீரம், சுறுசுறுப்பு, வலிமை ஆகியவற்றின் அடையாளமாக உள்ளன. புலியின் மீது அமர்ந்துள்ள ஐயப்பனும், சிங்கம் மீது அமர்ந்துள்ள அம்மனும், வலிமையான மனிதன் வலிமையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற தத்துவத்தையும், வலிமையால் வரும் வெற்றி, வெற்றியால் வரும் ஆணவத்தை அடக்க வேண்டும் என்ற அறத்தையும் அறிவிப்பதாக உள்ளது. விநாயகர் யானை முகத்தோன் என்பதால் யானை என்றாலே விநாயகர் என ஒரு எண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது. 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்' என்ற பழமொழி பிறருக்குப்பயன்படும் வகையில் வாழும் யானையின் வாழ்க்கையை விளக்குகிறது.

**ஊர்வனவும் ஆன்மிகமும்**

யானை மூஞ்சுறு மீது பயனிப்பது என்பது 'முயற்சி திருவினையாக்கும்' என்ற அறத்தைப் போதிப்பதாக உள்ளது. யானைமுகத்தோனும் மூஞ்சுறும் கொழுக்கட்டை என்ற உணவில் இணைவதால் உலக உயிர்கள் உணவு என்ற அடிப்படையில் இணைகின்றன என்ற நிலையையும்

காணமுடிகிறது. மண்மகிழ்ந்த அர வம்மலர்க்கொன்றை மலிந்தவரை மார்பிற் என்ற தேவார வரியில்; அரவம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. சிவனின் உடலில் அரவம் விளையாடுவதும், பாம்பணையில் திருமால் பள்ளி கொள்வதும், நாக தேவதை எனவும், ராகு, கேது எனவும் பாம்பு ஆன்மிகத்தில் இடம்பெற்றுள்ளது. பாம்பின் நஞ்சு மருந்தாகப் பயன்படுகிறது. உழவர்களுக்கு எதிராக இருக்கும் எலி பாம்பிற்கு உணவாகிறது என்ற வகையில் உழவுக்கு மறைமுகமாகப் பயன்படுகிறது.

**சிற்றுயிர்களும் ஆன்மிகமும்**

சிவபெருமானை வழிபட அகத்தியர் ஈ வடிவு கொண்டதாக ஈங்கோய்மலை வரலாறு கூறுகிறது. நடைசாத்தப்பட்ட நிலையில் இறைவனை வழிபட இறைவன் கூறிய வழியில் நடந்து, ஈ வடிவு கொண்டு இறைவனை வழிபட்ட வரலாறு மனமிருந்தால் மார்க்முண்டு என்பதை அறிவிப்பதாக உள்ளது. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இரக்கம் புரிந்தார் உமையா ளோடும் ஈங்கோய் மலையாரே எனப் பாடியுள்ளார். எறும்பில் கடிக்காததாக, கறுமை நிறத்தில் உள்ள எறும்பை பிள்ளையார் எறும்பு எனக் கூறுவதைக் காண முடிகிறது. பிள்ளையார் எறும்பு கடித்து பிறருக்குத் துன்பம் தருவதில்லை. "ஈசனின் உயிர்களுக்கு உணவளிக்கும் தன்மையை சோதிக்க விரும்பிய பார்வதி ஒரு எறும்பைப் பிடித்து பாத்திரத்தில் அடைத்து வைக்கிறார். மறுநாள் ஈசன் அவ்வுயிருக்கு உணவளிக்கவில்லை எனப் பார்வதி கூறுகிறார். பாத்திரத்தைத் திறந்து பார்த்தால் எறும்பு சுறுசுறுப்பாக இருந்தது. ஈசன் புன்னகைத்துக் கொண்டே நீ சென்று உன் மகன் பிள்ளையாரைப் பார் என்றார். பிள்ளையார் தன் தாய் அடைத்து வைத்த எறும்பிற்கு தனது உணவைக் கொடுத்து விட்டு பசியுடன் வாடியிருந்தார். இவ்வெறும்பிற்கு இப்பெயர் வந்த இக்கதை தாய் செய்த பாவம் பிள்ளைக்குச் செல்லும் என்பதை உரைக்கிறது. இதன் மூலம் தன் வினை தன்னைச் சுடும் என்ற அறத்தை அறியமுடிகிறது. மன்மதனின் கரும்புவில் நாணனாக வண்டு இருப்பதாக அழகர் கிள்ளை விடு தூது கூறியுள்ளது. வண்டு மகரந்தச்சேர்க்கையில் முக்கிய இடம் வகிக்கின்றது.

**உயிரினங்களின் அழிவும் பாதுகாப்பு ஏற்பாடுகளும்**

கோவில்களில் காணப்படும் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் உயிரினப்பன்மயத்தைக் காணமுடிகிறது. அழிந்து விட்டதாகக் கூறப்படும் யாளி என்ற உயிரினத்தின் சிலை கோவில்களில் காணப்படுகிறது. இவ்வுயிர் பற்றிய அறிவியல் உண்மைகள் இல்லை என்றாலும் புராணங்களிலும், கோவில் சிற்பங்களிலும் நக்கணையார் அகநானூற்றுப் பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ள உயிர் ஆகும். அறிவியலால் ஏற்றுக்கொள்ளப்பட்ட டைனோசர் என்ற விலங்கு அழிந்துவிட்டது. டோடோ பறவை இனம் அழிந்து விட்டது. இன்றும் அழியும் நிலையில் உள்ள உயிர்கள் பல உள்ளன. அவற்றைக் காப்பாற்ற புலிகள் பாதுகாப்புத் திட்டம், யானை பாதுகாப்புத் திட்டம், முதலை பாதுகாப்புத் திட்டம், பனிச்சிறுத்தை பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அருணாச்சலபிரதேசத்தில் ஆர்கிட்ஸ் என்ற அரிய வகைத் தாவங்களைப் பாதுகாப்பதற்காக ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம் ஒன்றும் பாதுகாப்புச் சரணாலயம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அழகுத்தாவரங்களைச் சேகரிதப்பதிலும் அவற்றை வகைப்பாட்டியல் ஆராய்ச்சிக்காகப் பயிரிடுவதிலும் மிக விரைவாக அழியும் தருவாயில் உள்ள அழகுத்தாவரங்களைப் பாதுகாப்பதிலும் திசுவளர்ப்த் தொழில்நுட்பத்தின் மூலம் அவற்றைப் பெருக்குவதிலும் மற்றும் பல புதிய வகை அழகுத்தாவரங்களை இனங்கண்டு பதிவு செய்வதிலும் மிகவும் ஆர்வத்தோடும் முனைப்போடும் செயல்பட்டு வருகின்றன. எலுமிச்சை வகை சரணாலயம், தேசிய பவளப்பாறைகள் ஆராய்ச்சி மையம் என்று பல்வேறு வகையில் இன்று உயிரினங்களைப் பாதுகாக்க ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது.

**முடிவுரை**

புவியியல், வானியல், தாவரஇனத்தில் மிகச் சிறியதான அருகம் புல் முதல் மிகப் பெரியஆலமரம் வரையிலும், விலங்கினத்தில் சிறிய நாய் முதல் பெரிய யானை வரை, ஊர்வனவும், சிற்றுயிர்களும் என அனைத்து நிலையிலும் இயற்கையும், உயிரினங்களும் ஆன்மிகத்தில் இடம்பெற்றிருப்பதை அறிய முடிகிறது. மருத்துவம், பொருளாதாரம், விழுமியங்கள், பயன்பாட்டுப்பொருட்கள் என அனைத்து நிலையிலும் மனித வாழ்வியலோடு உயிர்பன்மயம் தொடர்பு கொண்டுள்ளதை அறிய முடிகிறது.

நாட்டு மாடுகள், நாட்டு நாய்கள், நாட்டு மரங்கள், அழிந்து வரும் விலங்கினங்கள் மற்றும் தாவர வகைள், பறவை இனங்கள் என அனைத்தையும் காக்க உதவும் வகையில் வழிபாட்டு முறைகள் அமைந்துள்ளன. அறிவியல் வளர்ச்சி அடைந்த காலத்தில் அரசு உயிரினங்களைப் பாதுகாக்க எடுத்துவரும் முயற்சிகளை அன்றே ஆன்மிகம் வழி நமது முன்னோர்கள் எடுத்துள்ளது தெரியவருகிறது.உயிர்ப்பன்மயம் உலக சமநிலைக்கும், மனித வாழ்வியலுக்கும் அத்தியாவசியம் என்பதாலேயே இயற்கையோடு இணைந்த வாழ்;க்கையை மக்களிடையே நிலைநிறுத்த முன்னோர்கள் ஆன்மிகத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

**துணை நூல்கள்**


1. முது முனைவர் கி.முத்துச்செழியன் - உயிர் விரிமம், பிரினி~h பதிப்பகம்,2/153 சக்தி குடில், வடக்கு முதல்தெரு, பல்கலை நகர், மதுரை.
2. *N.Kumar - Introduction to spices, plantation crops,Medicinal and Aromatic Plants*
   *CBS Publishers & Distributors Pvt Ltd New Delhi.*
3. *Dhiraj Acharya — Applied Etno Botany, Venus Books , New Delhi*
4. டாக்டர் கே.கே.சுந்தர சோபிதராஜ் - தலமரங்கள் - சோபிதம், பாரதியார் தெரு, ஆனந்தபுரம், கிழக்குத்தாம்பரம், சென்னை
5. அகத்தியப்பெருமானின் சித்தன் அருள் - சேனல் எண் 640530 *ntspaPL https://siththaarul.blogspot.com/*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com